

JULY ISSUE
2021

# பொருளடக்கம்

தலைவரின் உள்ளத்திலிருந்து

## ~ THEMES ~

இயற்கை
விஸ்வாசம்
பருவநிலை மாற்றம்
மன நிலை

## ~ NON THEMATIC ENTREES ~

தன் நம்பிக்கை வெற்றிதரும்
தன்னம்பிக்கை உந்தன் கை!
எனது நாய்க் குட்டி
நான் மிருக வைத்தியர் ஆவது ஏன்?
எனது செல்ல பிராணி
Zoo Keeper
தைப்பொங்கல்
மனிதம் காப்பது அறம்
மனிதனை பதப்படுத்தும் வாசிப்பு
சிறுவனின் அன்பு
நம் முன்னோர்களின் பழக்கம் மூட நம்பிக்கையா?
தாய் மொழி கல்வியைய் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம்!
தெரிந்திராத மொழியை கற்றுக்கொண்ட அனுபவம்
காதலா கற்பனையா?
மும்மடி ஓவியம்
இரட்டையர்
கறுப்பு முகமூடி
திருவள்ளுவர்
எங்கள் மத்தியில் நடமாடும் தெய்வங்கள்
தேவதையை கண்டேன்

# தலைவரின் உள்ளத்திலிருந்து...

வருடந்தோறும் தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு விழா என இரண்டு விழாக்களை கேசி தமிழ்மன்றம் நடாத்திவருகிறது. பதினோராவது ஆண்டில் கால்பதித்து இந்த ஆண்டின் ஆடிப்பிறப்பு விழாவை சிறப்பாக நடாத்த திட்டமிட்டுள்ளது.

கேசி தமிழ் மன்றத்தினராகிய நாம் பெருமை கொள்ளக் கூடிய விடயம் ஒன்றை இங்கு நான் குறிப்பிட விழைகின்றேன்.தற்போது உங்கள் கைகளிலே தவழ்ந்து கொண்டிருக்கும் இந்த இளவேனில் சஞ்சிகையானது கேசி தமிழ் மன்றம் முக்கியமாக எந்த நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தில் நாம் வெற்றியடைந்துள்ளோம் என்பதைப் பறை சாற்றுவதாக, சான்றாக விளங்குகின்றது.

கேசி மன்றம் ஆரம்பிக்கப்பட்டபோது அடுத்த தலைமுறைக்கு எம் மொழி, கலாச்சாரத்தைக் கடத்தவேண்டும் என்பதை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்டது என்பதை பல வழிகளிலும் வெளிப்படுத்தி வந்திருக்கின்றோம். அதன் பயன் இன்று உங்கள் கைகளில் தவழும் இருபதாவது இளவேனில் சஞ்சிகையானது இரண்டாம் தலைமுறையினராகிய இன்றைய இளையோர்களினால் ஒருங்கமைக்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டு வெளிவருகின்றது எனும் இனிப்பான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றேன். இச்சஞ்சிகையை வாசித்து உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து அவர்களை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி மென்மேலும் அவர்களை ஊக்கப்படுத்த உங்கள் ஆதரவை நாடி நிக்கின்றோம்.

இதே போன்று தைப்பொங்கல் விழாவிக்கும் உங்கள் ஆக்கங்கள் முன்கூட்டியே அனுப்பி எமது ஆசிரியர் குழுவின் முயற்சிக்கு உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றேன்.

எல்லோரும் நோய்நொடியின்றி இன்புற்றிருக்க வாழ்த்தி விடைப்பெறுகிறேன். நன்றி வணக்கம்.

அன்புடன், வை. நவரத்தினம்.
தலைவர்,
கேசி தமிழ் மன்றம்.

## இளவேனில் அரையாண்டு சஞ்சிகை

உங்கள் ஆதரவுக்கு நன்றி !

உங்கள் கருத்துக்களை editor@caseytamilmanram.org.au என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

- இளைஞர் அணி
(ஆசிரியர் குழு)

ISSUE 20 / JULY 2021

# இளவேனில்

ஒரு புது சகாப்தம்...

கேசி தமிழ் மன்றம்
இதழ் 20 | ஆடி 2021


ISSN 2200 - 789X

# இயற்கை

**கவின் சத்தியா**

இயற்கையானது நாம் குடிக்கும் நீர், நாம் சுவாசிக்கும் காற்று, நாம் நேசிக்கும் சூரியன், பறவைகள் கூவும் சத்தம், நாம் பார்க்கும் சந்திரன் மற்றும் பலவற்றைக் கொண்டது.

இயற்கை மனிதர்களுக்கு முன்பு இருந்தே வருகிறது, மனிதகுலத்தை கவனித்து, நம்மை என்றென்றும் வளர்த்து வருகிறது. எல்லா வகையான சேதங்களுக்கும் தீங்குகளுக்கும் எதிராக நம்மைக் காக்கும் ஒரு பாதுகாப்பு கவசத்தை இயற்கை நமக்கு வழங்குகிறது. இயற்கையின்றி மனிதகுலத்தின் பிழைப்பு சாத்தியமற்றது. அதை மனிதர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



இயற்கையானது நம்மைப் பாதுகாக்கும் திறனைக் கொண்டிருந்தாலும், அது முழு மனித இனத்தையும் அழிக்கும் அளவுக்கு சக்தியும் வாய்ந்தது. இயற்கையின் ஒவ்வொரு வடிவமும், தாவரங்கள், விலங்குகள், ஆறுகள், மலைகள், சந்திரன் அனைத்தும் நமக்கு அவசியமானது. இதில் ஒன்று இல்லாமல் போனாலும் சம நிலை குலைந்தாலும் மனித வாழ்க்கையின் செயல்பாட்டில் பேரழிவை ஏற்படுத்தும். இயற்கையைப் பாதுகாக்க, மேலும் சேதம் ஏற்படாமல் தடுக்க இப்போதே கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அனைத்து மட்டங்களிலும் காடழிப்பைத் தடுப்பது மிக முக்கியமான படி. விவசாய விரிவாக்கம், கால்நடை வளர்ப்பு, சுரங்கம், அணை கட்டுமானம் மற்றும் கட்டமைப்பு மேம்பாடு போன்ற மனித நடவடிக்கைகள் அனைத்தும் காடழிப்புக்கு பங்களிக்கின்றன. மரங்களை வெட்டுவது விலங்குகளுக்கான வாழ்விடங்களை இழக்க நேரிடும், கார்பன் டைஆக்சைடு (Carbon dioxide) வெளியேற்றத்தின் அளவு அதிகரிக்கும் மற்றும் மிகவும் அழிவுகரமான விளைவுகளுக்கு வழிவகுக்கும்.

கடல் நீர் மாசுபடுவதையும் நிறுத்த வேண்டும். பிளாஸ்டிக் பயன்பாடு, தொழில்துறை கழிவுகள், கடல் கழிவுகள், எண்ணெய் கசிவுகள் மற்றும் கதிரியக்க கழிவுகள் அனைத்தும் நீர் மாசுபாட்டிற்கு பங்களிக்கின்றன. இதன் தாக்கம் நூற்றுக்கணக்கான கடல் இனங்கள் மூச்சுத் திணறல் மற்றும் கழிவுகளில் சிக்குவது. கடல் பறவைகள், திமிங்கலங்கள், மீன்கள் மற்றும் ஆமைகள் போன்ற கடல் வனவிலங்குகள் இரையில், பிளாஸ்டிக் கழிவுகளை உண்பதால் இறக்கின்றன.

வாகனங்கள், ஏ.சி மற்றும் அடுப்புகளின் அதிகப்படியான பயன்பாடு ஓசோன் அடுக்கைக் குறைக்கும் ஏராளமான குளோரோஃப்ளூரோகார்பன்களை (Chlorofluorocarbons’) வெளியிடுகிறது. இது புவி வெப்பமடைதலுக்கு காரணமாகிறது. இது வெப்ப விரிவாக்கம் மற்றும் பனிப்பாறைகள் உருகுவதை ஏற்படுத்துகிறது.

# இயற்கை அழகே தனி அழகு

சுருதி தர்மசீலன்

எங்கள் உலகே தனியழகு!
இயற்கை அழகே தனி அழகு!
கோடை வெப்பம் ஓர் அழகு!
கதிரவன் வெளிச்சம் ஓர் அழகு!
கடலில் அலைகள் ஓர் அழகு!
கரையில் பிள்ளைகள் ஓர் அழகு!

எங்கள் உலகே தனியழகு!
இயற்கை அழகே தனி அழகு!
இலையுதிர் கால நிறம் அழகு!
அதில்விழும் இலைகள் ஓர்
அழகு!
குயிலின் இசையே ஓர் அழகு!
கிளிகள் வர்ணம் தனி அழகு!

எங்கள் உலகே தனியழகு!
இயற்கை அழகே தனி அழகு!
வானம் தூவும் மழை அழகு!
போர்வை போர்த்தும் பனி அழகு!
தூங்கும் மிருகமும் ஓர் அழகு!
கடலில் மதியும் ஓர் அழகு!

எங்கள் உலகே தனியழகு!
இயற்கை அழகே தனி அழகு!
வசந்தத்தின் மலர்கள் ஓர் அழகு!
வானவில் தருமே தனி அழகு!
காற்றில் ஆடும் இலை அழகு!
கனிகள் தொங்கும் வகை அழகு!

எங்கள் உலகே தனியழகு!
இயற்கை அழகே தனி அழகு!
வகுத்தான் இறைவன்
உலகெங்கும்
வருமோ இதுபோல் வேறெங்கும்?
இயற்கை அழகை நாம் காப்போம்!
இனிதாய் வாழ வழி செய்வோம்!



வினி ராஜராஜன்

# மெய் சிலிர்க்கும் அழகு

நீர், நிலம், ஆகாயம், நெருப்பு, காற்று. இவை அனைத்தும் கடவுள் படைத்த ஐம்பூதங்கள். 'எம் வாழ்க்கையே இப்பூதங்களில் தான் அடங்கியுள்ளது' என்று பலர் அறியாமல், கிணற்றுத் தவளை போல் வாழ்ந்து இன்றும் இயற்கையை அழிக்கின்றார்கள். எங்களுக்கு நன்மைகளை மட்டுமே விளைவித்த இவ்வியற்கையிற்க்கு நாங்கள் காட்டும் நன்றிக்கடன் இதுவா?

இயற்கையின் அழகை வார்த்தையால் வர்ணிக்கமுடியாது.வண்ண வண்ண பூக்கள் மலர்ந்து, சிறு மழைத் துளிகள் ஆறாய் ஓடி, வானுயர்ந்த மரங்கள் எல்லாம் நிழலை பரப்பி, பறவைகள் தங்களின் மொழியில் பாடி, எம் வாழ்க்கையையே மேம்படுத்துகின்றன. நாம் இந்த புவியில் பூமித்தாயின் தயவால் வாழ்கிறோம். பூமித்தாயின் கோபத்திற்கு நாங்கள் ஆளாக்கக்கூடாது. அவளுடைய கோவம் பூமியில் வாழும் அனைத்து உயிர்களையும் பலி எடுத்துவிடும். ஆயிரக்கணக்கான உயிரினங்கள் வாழும் இப்புவியில், நாங்கள் ஒரே ஒரு உயிரினம் மட்டுமே.

"மனிதர்கள் இல்லாமல் பறவைகள் வாழ்ந்திட முடியும், பறவைகள் இல்லையென்றால் மனிதர்கள் வாழவே முடியாது" என்று பறவை இயல் அறிஞர், சலீம் அலி அவர்கள் கூறியுள்ளார். வாழ்க்கை ஒரு சங்கிலி போல் பின்னிப் பிணைந்தது. நாம் இந்த சங்கிலியை உடைத்து, எம் எதிர்காலத்தை மட்டுமல்லாமல் இப்புவியில் வாழும் மற்றைய உயிரினங்களின் எதிர்காலத்தையும் அழிக்கின்றோம். திடீர் வெள்ளம், காட்டுத்தீ, வறட்சி அனைத்தும் இவ்வருடத்தில் நிகழ்ந்த இயற்கை பேரழிவுகள். நாம் இயற்கையை நேசிக்காததற்கு தண்டனையே இவை.

ஓலைச் சுவடுகளில் எழுதிய காலம் மாறி இப்பொழுது கணனி எனும் தொழில் நுட்பத்தை பயன்படுத்துகின்றோம். வாழை இலையில் உணவு உண்ட காலம் மலையேறி, இப்பொழுது நாம் நெகிழிப் பொருட்களில் உண்கிறோம். இந்த நெகிழிப் பொருட்களை குப்பைத் தொட்டியிற்குள் வீசியவுடன், அனைத்தும் மாயத்தால் மறைந்துவிடும் என்று நினைக்கின்றீர்களா? அனைத்தும் காற்றோடு கலந்து அழிந்துவிடும் என்று நினைக்கின்றீர்களா?

நீங்கள் ஒரே ஒரு நாள் பயன்படுத்திய நெகிழி, நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு சீரழியாமல், மண்ணுடன் மக்கிப் போகாமல், மண்ணுக்குள் புதைந்து, சுற்றி இருக்கும் சூழலை விஷமாக்கிவிடும். கடலிற்குள் கலந்து கடல் வாழ் உயிரினங்களை மண்ணோடு மண்ணாகப் புதைத்துவிடும். ஒவ்வொரு வருடமும் நூறாயிரம் கடல் வாழ் உயிரினங்கள் மனிதர்கள் பயன்படுத்தும் நெகிழிகளால் இறக்கின்றன. வாயில்லா ஜீவங்களைக் கொன்ற பாவம் உங்களக்கு வேண்டுமா?


சொத்து, பணம், மகிழூந்தி, வீடு போன்ற அனைத்தையும் சேமித்து உங்கள் சந்ததியினர்குளுக்கு கொடுத்தால் மட்டும் போதாது. அவர்கள் வளத்துடன், சுகத்துடன், சந்தோசத்துடன் வாழ நாம் ஒரு தூய்மையான சுற்றுச் சூழலை உருவாக்கவேண்டும். மகிழூந்தியில் செல்லாமல், முடிந்தவரை நடந்து செல்லுங்கள். கூடுதலான மின்சாரத்தை பயன்படுத்தாமல், இயற்கையுடன் இணைந்து வாழப் பழகுங்கள். 'சிறு துளி பெரு வெள்ளம்' என்பதற்கேற்ப, இயற்கையை காப்பதற்கு இன்றிலிருந்தே பங்களியுங்கள். சுகமான வாழ்க்கையை இயற்கையுடன் இணைந்து வாழ்வோம்!

# காலங்கள்
# காலங்கள்
# காலங்கள்

## இலையுதிர் காலம்

இலை உதிர் காலத்திலே வெப்பநிலை குறைந்து குளிர் தொடங்கும். இக்காலப் பகுதியில் இலைகள் மஞ்சள், சிவப்பு மற்றும் செம்மஞ்சள் நிறமாக மாறத் தொடங்கும்.





## குளிர்காலம்


குளிர் காலத்தில் மரத்தில் இருந்த இலைகள் உதிர்ந்து மரங்கள் எல்லாம் ஆடை இல்லாத மனிதன் போல காட்சி அளிக்கும். இக்காலத்தில் பனித்துளிகள் கொட்டும். இது மிகவும் குளிரான காலம்.

**சுபகா சுதர்சன்**

# காலங்கள்
# காலங்கள்
# காலங்கள்

## இளவேனிற் காலம்

இக்காலத்தை வசந்த காலம் என்றும் கூறலாம். இது மனதுக்கு மிகவும் சந்தோசத்தைத் தரும் ஒரு காலம் ஆகும். மரங்கள் எல்லாம் பச்சை நிறமாகக் காட்சி அளிக்கும். பூக்கள் பல வர்ணங்களில் பூத்துக் குலுங்கும்.





## கோடை காலம்

வெப்பம் அதிகமான காலப்பகுதி இதுவாகும். நாங்கள் கடற்கரைக்கு விரும்பிச் செல்வோம். இக்காலப்பகுதியில் பகற்பொழுது நீண்டதாக இருக்கும்.

**சுபகா சுதர்சன்**




வெண்ணிலா
மகிந்தன்




மீனா

# விதை குறும்பட விமர்சனம்

நவீன உலகத்தில் எமது முன்னுரிமைகள் மிகவும் வேகமாக மாறுகிறது. பத்து வருடங்களுக்கு முன்பு சமூக ஊடகங்கள் பெரிய அளவில் பிரபலம் இல்லை. ஆனால், இன்று நாம் "bottle cap challenge" போன்ற சவால்களுக்கு நிறைய முக்கியத்துவம் அளிக்கின்றோம். இளைஞர்கள் மருத்துவம், சட்டம், இலத்திரனியல் போன்ற அதிக ஊழியம் பெறக்கூடிய துறைகளில் கல்வி கற்க கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இயற்கை விவசாயம் போன்ற அடிப்படைத் துறைகள் புறக்கணிக்கப்படகூடாது என்பதை விதை குறும்படம் வாதிடுகின்றது.

விதை பல விருதுகளைப் பெற்ற ஒரு சிறந்த குறுந்திரைப்படம். இந்திய இளைஞர்களின் முன்னுரிமைகளில் ஏற்படும் மாற்றங்களை காட்டி ஒரு நல்ல கருத்தை வலியுறுத்துகிறது. பூங்கொடி என்ற ஒரு 12ம் தரம் படிக்கின்ற பெண்ணின் கதையினூடாக இது சொல்லப்படுகின்றது.




நான் திரைக்கதையை இங்கு விவரமாக கூறமாட்டேன். ஏன் என்றால் நீங்களே இந்த சிறந்த குறும்ப்படத்தை பார்த்து மகிழ வேண்டும். எமது சமூகத்தில் விவசாயத்தின் முக்கியத்துவத்தின் அறிவு மிகவும் குறைந்து செல்கின்றது. அதனால் இக்குறும்படம் எமது விழிப்புணர்வைத் தூண்டும்.

பூங்கொடியாக நடித்த சௌமியாவும் அவளது அப்பாவாக நடித்த சிவகுமார் ராஜுவும் மிகவும் நன்றாக நடித்துள்ளார்கள் இருவர்களின் உறவை பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவர்களின் உடைகளும் படத்திற்கு உண்மை தருகின்றது. ஆனால் மற்ற நடிகர்களின் நடிப்பு கொஞ்சம் மேம்படுத்தலாம். உதாரணமாக, ஆசிரியராக நடித்த ஸ்வேதா உணர்ச்சி இல்லாமலும் முகத்தில் ஒரு பாவனையும் இல்லாமல் குறைவாக நடித்துள்ளார்.

விதையின் நம்பகத்தன்மையையும் பாராட்ட வேண்டும் திருவள்ளூர் மாவட்டத்தில் இயற்கையான ஒரு நெல் வயலில் இக்குறும்படத்தை அமைத்துள்ளது ஒரு நல்ல உணர்வைத் தருகிறது. படத்தின் முதல் காட்சியில் அருமையான இசை உங்களை உள்வாங்கும். கேட்பதற்கு இனிமையான புல்லாங்குழல் மென்மையான குரல் போன்றவை இக்குறும்ப்படத்தின் பின்னணி இசைக்கு பங்களிக்கின்றன.

கிராமத்து வாழ்க்கை முறையில் ஒரு மகளுக்கும் தகப்பனுக்கும் இடையில் உள்ள உன்னதமான பாசப்பிணைப்பு இந்தப்படம் முழுக்க வியாபித்து இருக்கிறது. பார்க்கவேண்டிய படம் பார்த்து யோசிக்க வேண்டிய படம்.

**மகேஷ் நமசிவாயம்**

# பூக்கள்

நல்ல விடயங்களை ஆரம்பிக்கும் முதல் பிள்ளையாருக்குப் பூக்கட்டிப் பார்ப்பர். நாங்கள் இரண்டு பூக்களை மனதில் நினைத்துக் கொண்டு ஐயாவிடம் சொன்னால் அதில் ஐயா ஒரு பூவைத் தருவார்.அதன் பிறகு அந்த விடயத்தைத் தொடங்குவதா இல்லையா என்று யோசிப்போம். எங்கள் வீட்டில் இது வளமுறையே. கிளியின் நிறம் பச்சை அதேபோல் செவ்வரத்தம்பூ சிவப்பு என்று பாலர் வகுப்பில் படித்தது ஞாபகத்தில் வருகின்றது.

**செவ்வரத்தம்பூ**.

கரவெட்டியின் தேசியப் பூவாகச் செவ்வரத்தம்பூ இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. கரவெட்டி மண்ணில் இலகுவாக வளரக்கூடிய பூமரங்களில் செவ்வரத்தையும் ஒன்று. கரவெட்டியில் எல்லோர் வீடுகளையும் அலங்கரித்திருக்கிறது இந்தச் செவ்வரத்தம்பூ.

கிணற்றைச் சுற்றி மறைத்து செவ்வரத்தை வேலி, அத்தோடு மலசலகூடத்தைச் சுற்றி மறைப்பு வேலியென, அழகோடு சேர்த்து மறைப்பாகவும் இருந்தது அன்று. சிவப்பு நிறத்தில் ஒற்றைச் செவ்வரத்தை அல்லது அடுக்குச் செவ்வரத்தை என இருக்கும். இன்றோ பல வண்ணங்களில் இருக்கின்றது.

சிறு குழந்தைகளைக் குளிப்பாட்டும்போது சுடுநீரில் அதனைப் போடுவார்கள். குழந்தை சிவப்பாக வரும் என்று நம்பினார்களோ தெரியவில்லை. ஆனால் நிச்சயம் அதில் மருத்துவ குணங்கள் நிறைந்ததாகத்தான் இருக்கும். சிலர் அரப்பு அல்லது சிகைக்காயுடன் செவ்வரத்தம்பூ, இலை சேர்த்து அரைத்துத் தலைக்குத் தேய்த்து முழுகினர் அன்று. அதனால் பலருக்குத் தலைமுடியும் இருந்தது. பல நல்ல விடயங்களை நாம் இன்று தொலைத்து விட்டோம். சிறு வயதில் செவ்வரத்தம்பூ சாப்பிட்டதும் நினைவில் வருகின்றது. எங்கள் ஊர்க்கோவில்களிலும் செவ்வரத்தம்பூ இல்லாமல் இருக்காது.

**மல்லிகை**.

மல்லிகையும் மஞ்சள் அலரியும் பெரும்பாலும் கரவெட்டியை அலங்கரித்தது என்றால் மிகையாகாது. இரவில் பந்தலின் கீழ் இருக்கும்போது நல்ல வாசனையுடன், மனதுக்கு இதமாகவும் இருக்கும். பகலில் நிழலாகவும் இருக்கும். மல்லிகையிலும் கொத்துமல்லிகை, ஒற்றை மல்லிகை என இருக்கும். கண்டதும் பிடுங்கி வாசனையை நுகர்ந்து பார்த்தவர்களாகவே பலரும் இருக்கிறோம்.

**கடதாசிப்பூ**.

இதுவும் கரவெட்டியில் இலகுவாக வரக்கூடிய பூமரங்களில் ஒன்று. முள் இருப்பதனால் பலர் விரும்புவதில்லை. பல வண்ணங்களில் இருந்தாலும் , பெரும்பாலும் கடும்றோஸ் நிறத்தில் இருக்கும். புகைப்படங்கள் பல அதற்குப் பக்கத்தில் நின்று எடுக்கப்பட்டிருக்கும். வாசனை எதுவும் இருக்காது ஆனாலும் மிகவும் அழகாக இருக்கும். கரவெட்டியில் பலவீடுகளில் இருந்தாலும், கடதாசிப்பூ என்றதுமே பொன். கணேசன் சேர் வீடுதான் நினைவில் வருகிறது.

**ரோசா**.

இது கரவெட்டியின் மண்ணுக்கும், தண்ணிக்கும் அன்று வளரவே மாட்டன் என்று அடம் பிடித்தது. ஆனால் இன்று பலரது வீடுகளை அலங்கரித்து அழகாகக் காட்சி தருகிறது. இதற்கு, பலருக்கு நன்றி சொல்ல வேண்டி உள்ளது. இன்று எல்லோரது வீடுகளும் சோலையாக அழகாக இருக்கின்றனவென்றால், எல்லோர் வீடுகளுக்கும் தண்ணீர் கிடைத்திருப்பதே பெரிய காரணம். அதற்காக உழைத்த அன்பு உறவுகள் அனைவருக்கும் தலை தாழ்த்தி நன்றி கூறுகிறேன்.

கரவெட்டி பூமரங்களால் மட்டுமல்ல நல்ல பல உள்ளங்களாலும் மேலும் அழகாகி வாசனை பரப்பட்டும். பாராட்டு, வாழ்த்து. வாழ்க வளத்துடன்.

**முகநூலில் எழுதியவர் கரவெட்டி ராஜி ரசித்துப் பகிர்ந்தவர் நவா**.

சமுத்ரா பத்மஸ்ரீ







நிர்த்திகா ஸ்ரீ

# விஸ்வாசம்

**சமுத்திரா பத்மசிறி**

அப்பா வேலைக்குப் போய்விட்டபின், அம்மாவும், நாலு வயது மகனும், வீட்டில் இருக்கிறார்கள்.

“தம்பி நான் குளிக்கப் போகிறேன். நல்ல பிள்ளையாக **TV** பாத்துக்கொண்டு இருங்கோ.”

”**OKAY** அம்மா.”

தொலைபேசி மணி அடிக்கிறது, ”ரிங் ரிங் ரிங் ரிங்”

தம்பி ஓடிப்போய் எடுக்கிறார்.

”**HELLO**, நான் தம்பி கதைக்கிறன் நீங்க யாரு”

”**HELLO** தம்பி, நான் குமாரகுலசிங்கம் மாமா, அப்பா அல்லது அம்மா நிக்கினமா**?**”

”அப்பா வேலைக்குப் போய்ட்டார். அம்மா குளிக்கிறா.”

“குமாரகுலசிங்கம் மாமா **CALL** எடுத்தவர் என்று அம்மாவிட்ட சொல்லுவீங்களா**?**”

”**OKAY**. குமுறு குமுறு சிங்கம் மாமா **CALL** எடுத்தவர் எண்டு சொல்றன்.”

”ம்மம் தம்பி வீட்டில் வேற யாரும் இல்லையா**?**

”ஓம், விஸ்வாசம் நிக்கிறார்.”

”அப்ப விஸ்வாசத்திட்ட **PHONE**ஐக் குடுங்கோ, நான் அவரோட கதைக்கிறன்”.

தம்பி ஓடிப்போய் விஸ்வாசத்திடம் **PHONE**ஐ கொடுத்துவிட்டு **TV** பார்க்கிறார்.

அம்மா குளித்திவிட்டு வந்து **TV** பார்த்துக்கொண்டிருக்கும் மகனிடம் கேட்கிறார், ’தம்பி அப்பாவா **CALL** எடுத்தது**?”**

”இல்லை. வெறு யாரோ எடுத்தவர்.”

”என்ன சொன்னவர்**?”**

”அவர் என்னோட கதைக்கேல்லை. அவர் விஸ்வாசத்தோடதான் கதைக்கப் போறன் எண்டு சொன்னவர் நான் விஸ்வாசத்திட்ட **PHONE**ஐக் கொடுத்திட்டன்”, என்று சொல்லிவிட்டு **TV**யுடன் ஒன்றித்துவிடுகிறான் மகன்.”

அம்மா அதிர்ச்சியுடன், வாசலில் **PHONE**ஐ கடித்து விளையாடிக் கொண்டிருந்த நாயைப் பாக்கிறார்.



# நன்றி மறவாமை

மனித விழுமியங்களில் தலையாயது நன்றி மறவாமை ஆகும். காலமறிந்து, இடமறிந்து, ஒருவர் நமக்கு செய்த உதவியானது பெறுமதி வாய்ந்ததாகும். அதனை நாம் ஒருபோதும் மறத்தலாகாது. இதனையே தமிழ் மூதாட்டி ஔவை ஆத்திசூடியில் ”நன்றி மறவேல்” என்று உபதேசிக்கிறார். அதற்கு ஒரு உதாரணம் கூறுகின்றார். இளங்கன்றாக இருக்கின்ற தென்னம்பிள்ளைக்கு ஒருவர் அடிவேரில் தண்ணீர் ஊற்றுகிறார். அது வளர்ந்து தென்னை மரமாகிய பின் பிரதியுபகாரமாக இனிய இளநீரை தன் தலைப்பாகத்தால் தந்து நன்றி செலுத்துகின்றது.

செய்நன்றி மறவாது வாழ்வது மனித வாழ்வின் உயரிய பண்பாகும். அதுவே தமிழினத்தின் தனிப்பெரும் பண்பாடு ஆகும். தமிழரின் பண்டிகையான தைப்பொங்கல் சூரியனுக்கு நன்றி செலுத்தும்முகமாக கொண்டாடப்படுகிறது. அதற்கு அடுத்த நாள் உழவனுக்கு உறுதுணையாக இருந்த மாட்டுக்கு நன்றி செலுத்துகின்றோம். இப்பண்டிகை தமிழரின் நன்றி மறவாப் பண்பை எடுத்துக்கூறும் பண்டிகையாகும்.

”எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு” என்றார் திருவள்ளுவர். எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வுண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வில்லை. அறத்திலேயே சிறந்த அறம் நன்றியுடையவனாக இருத்தல் ஆகும்.

”நன்றி மறப்பது நன்றன்று நன்றல்வது அன்றே மறப்பது நன்று”. ஒருவர் செய்த உதவியை ஒருபோதும் மறத்தலாகாது. ஆனால் செய்த தீமையை உடனே மறக்க வேண்டும் என்ற அருமையான பண்பை தனது ஈரடி குறளில் வலியுறுத்துகின்றார் திருவள்ளுவர்.

மேலும் தமிழ் இலக்கியங்கள் தரும் நற்சிந்தனைகளில் செய்நன்றி மறவேல் முக்கிய இடம் பெறுகின்றது. மகாபாரத கதாபாத்திரமான கர்ணன் செய்நன்றி மறவாத நற்பண்பு நிறைந்த ஒருவனாக இன்றும் எல்லோராலும் போற்றப்படுகின்றான். பல சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி செஞ்சோற்றுக் கடன் செலுத்துவதே தனது குறிக்கோளென உலகிற்கு எடுத்துக் கூறினான்.

நன்றி மறப்பது நன்று அன்று அல்லவா?

அதனால் தமிழர்களாகிய நாம் எப்பொழுதும் கடவுள், மாதா, பிதா, குரு, இயற்கை எல்லாவற்றிற்கும் தவறாது நன்றி செலுத்தி வருகின்றோம். தமிழரின் வாழ்க்கையில் நன்றி மறவேல் என்ற பண்பு பின்னிப் பிணைந்துவிட்டது.


**வைஷ்ணவி யோகானந்தா**

# விசுவாசம்...

உணர்வுகளை புரிந்து உண்மையாயிரு
உண்மையென நம்புவர்களுக்கு
உறுதியாயிரு
காரியங்கள் சிதறாது செயலாற்று
யாரும் இல்லாத இடத்தில்
அருகிருப்பவர் பற்றி அவதூறு பேசாதிரு
உளமார உண்மையாய் இரு
உன்னை பின்பற்றி உலகமே
பின்தொடருமே..
நாணயத்தின் இரு பக்கங்கள் போலவே
நல்லவர் கெட்டவர் நானிலத்தில் உண்டு
நம்பியே தொடர்பவர்கட்கு
முன்மாதிரியாக இரு
கலியுகத்தை கடப்பது எளிதல்ல
கஷ்டங்கள் உனை சிதைத்தாலும்
கடைசிவரை கைவிட்டு விடாதே
காலம் உனை கரை சேர்க்கும்
நம்புவர்களுக்கு உயிர்நாடியாய்
இருந்திடு...
நேரிய செயலால் நெஞ்சம் நிறையும்
சீரிய நடத்தை கொண்டிரு பாரே உனை
அறியும்
தேடிய பொருள் கொண்டு பிறரை
மகிழ்வி
வாடிய மனங்களுக்கு
வார்த்தையாலேனும் குளிர்வி
உண்மையாய் இருந்தாலே உலகப்
பெரும் அதிசயம்
அதுவே அகிலத்தில் விசுவாசம்!








**யுவர்ணிகா ரமேஸ்**




நரேன்

எய்டன் அரவிந்தன்




எய்டன் அரவிந்தன்




# உடலும் மனமும்

**நித்தியா பத்மசிறி**

வீட்டில் சும்மா
வெட்டியாக இருந்தால்
வேண்டாத வியாதியும்
வீணான எண்ணமும்
விட்டு விட்டு கலைக்கும்.

காலார காலையில் நடந்து
கண்டவருக்கும் புன்னகை
பூத்து
வயிரார விதமான உணவு
உண்டு
கண்ணயர நல்ல தூக்கம்
கொண்டு


நல்ல புத்தகம் தேடி வாசித்து
நாலு நண்பருடன் சேர்ந்து
கதைத்து
பிள்ளைகளுடன் பிரியமாக
விளையாடி
பிடித்தவைகளை தேடித் தேடி
செய்து

பின்காணியை சற்று துப்பரவு
செய்து
பயிரும், பூவும் பலதும் நட்டு
முன் வீட்டவருக்கு சிறிது
கொடுத்து
முடியாதவருக்கு உதவி
செய்து

ஓடி ஓடி வேலை செய்தால்
ஆடிக்கொரு தரமாவது ஆற
இருந்து
பாடல்கள் பலதும் கேட்டு
இரசித்து
ஆடல்கள் சிலது பார்த்து
மகிழ்ந்து

இருப்பதுடன் திருப்தியாய்
வாழ்ந்து
இல்லாதவருக்கு பகிர்ந்து
கொடுத்து
நொந்தவரை ஆற்றித் தேற்றி
வந்தவரை வரவேற்று
நடந்தால்

உடலில் பெலனும் உறுதியும்
சேரும்
மனமோ மலர்ந்து மணம்
வீசும்!



# ஆற்றுப்படுத்தல்களை ஆதரவாய் நாடிடுவீர்!

முற்றத்து மொட்டுகள் மலர்ந்து சிரித்திருக்க
சுற்றத்தைக் காணாது சுழலும் ஒரு மனது!
வேற்றுநாடுகளில் வேண்டுமொரு வாழ்வென்று
தோற்று விட்டதாய் அலைபாயும் ஒரு மனது!

நேற்றிருந்த சொந்தத்தைத் தேடுமொரு நினைவு!
காற்றோடு பேசிநிற்க கலையுமொரு கனவு!
ஆற்றுப்படுத்தல்களும் ஆசுவாசப்படுத்தல்களும்
தேற்றும் உறவுகளும் தேவையிங்கு பலருக்கு!

கற்றோர் கல்லாதோர் பெரியோர் சிறியோரும்
மற்றோர் நமைப்பற்றி எதுநினைப்பார் என்றெண்ணி
உற்றார் உறவினர்க்கும் உண்மைநிலை உரைப்பதில்லை!
பெற்றோர், சகோதரரின் பேச்சிலும் வருவதில்லை!

அற்றகுளத்தில் கொட்டியும் ஆம்பலும்போல்
நற்றமிழர் பண்பென்று மனநலத்தைக் காப்பதில்லை !
தற்காப்பு வேண்டி உதவியும் கேட்பதில்லை!
புற்றாகும் புண்ணுக்கு மருந்தும் இடுவதில்லை!

சுற்றுச் சுவரிருந்தாலே சித்திரங்கள் சிறப்பாகும்
இற்றுப்போன மனம் வெறும் கறையான் புற்றாகும்!
ஆற்றுப்படுத்தல்கள் அணைபோடும், மருந்தாகும்
ஊற்றும் குளிர்நீரை, ஊக்கம் கொடுத்தேகும்!

ஏற்றம் நீர் பெறவேண்டும், எழவேண்டும் வாழ்வில்
தோற்றோம் என்றில்லை எழுந்தோம் என மீண்டும்
நேற்றுப்போல் வாழ்வை ரசிக்கும் நிலைவேண்டும்
ஆற்றுப்படுத்தல்களை ஆதரவாய் நாடிடுவீர்!

**ஆக்கம்: நித்யா தர்மசீலன் (தர்மதா)**



# நீங்கள் யாரை விரும்புகிறீர்கள் ?

நம்மில் எத்தனை பேர் தினமும் கண்ணாடியைப் பார்த்து நம்மை நாமே காதலித்திருக்கிறோம்? நம்மில் பலர் அதைப்போல் செய்வது இல்லை. தற்போதைய உலகில், நாம் பல சவால்களை எதிர்கொள்கிறோம். போட்டித்தன்மையுடன் இருக்க நம்மை வலியுறுத்துகிறோம். நாம் வாழ்க்கையில் தேவையற்றவை மீது அதிக கவனம் செலுத்துகிறோம், அதனால் நம் நல்வாழ்வுக்கு மன அழுத்தத்தை சேர்க்கிறோம். நாம் ஒருபோதும் நமக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

முதலில், நாம் நம்மை நேசிக்க வேண்டும். மேலும் வாழ்வில் முன்னேற நம்மை நாமே பாராட்டுவது அவசியம். ஒவ்வொரு மனிதனும் வித்தியாசமானவர், தனித்துவமான திறமைகளைக் கொண்டவர். ஒவ்வொருவரும் தன் மீது நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். நாம் நம் முதல் விமர்சகராகவும், நம் வேலையை நாம் மட்டுமே சிறப்பாக செய்ய முடியும் என்ற எண்ணம் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

கடவுளின் உதவியுடனும், நம் நல் முயற்சிகளுடனும், நாம் வாழ்க்கையில் வெகுதூரம் வந்துவிட்டோம். அதைப் பற்றி யோசித்து மகிழ்ச்சியாக இருங்கள். நாம் மனச்சோர்வை உணரும்போது, நமது மகிழ்ச்சியான கடந்த தருணங்களையும், நமது கடந்த கால போராட்டங்களையும் நினைவூட்டுங்கள். அந்த போராட்டங்கள் இப்போது எளிதாக இருக்கும் விதத்தை உணர்வீர்கள். இதேபோல் இந்த தருணம் கூட ஒரு அற்புதமான நினைவை உருவாக்கும். இந்த மனநிலை நமது மன அழுத்தத்தை மீட்டெடுக்கவும் நம்மை பெருமைப்படுத்தவும் உதவும்.

இறுதியாக, நமது சிறிய அற்புதமான இதயம் அழகான நினைவுகளைக் கொண்ட இடம். அதை தேவையற்ற விஷயங்களைக் கொண்டு நிரப்ப வேண்டாம். அடுத்த முறை உங்கள் மன நலம் கெடுவது போல் உணரும்போது, கண்ணாடியைப் பார்த்து புன்னகையுடன், "நான் என்னை நேசிக்கிறேன்" என்று சொல்லுங்கள். உண்மையாக சொன்னால்,

இது வேடிக்கையாகத் தோன்றலாம், ஆனால் இது நித்தயம். மனதில் மாற்றத்தை உண்டாக்கும்

வாழ்க வளமுடன்!
நன்றி, வணக்கம்.

**கார்த்திகா விக்னேஷ்**







கா. தன்யஸ்ரீ




MASK அணிவோம்
பாதுகாப்பாக இருப்போம்.
S.சுகந்தன்





# பருவநிலை மாற்றம் !

இளவேனில் இன்னாளில் இளையோரின் இதயத்தே
இன்றலரும் தாமரையோ இனிக்கும் நறுமுகையோ
அளவினிலே சிறிதெனினும் அரும்பொருள் உள்வாங்கி
அழகுடனே பவனிவரும் ஆரமுதத் தமிழேடோ
களமிதிலே கால்பதிக்கும் கன்னியரும் காளையரும்
கன்னல் மொழிகொண்டு கரம்பதிக்கும் புதுவரவோ
உளமதிலே களிகொண்டு உங்கள்பணி சிறந்திடவே
உயர்தமிழ்ப் பாக்கொண்டு உளமாற வாழ்த்துகிறோம் !

பருவநிலைக் காலங்கள் பாரினிலே பொய்க்கவில்லை
பக்குவமாய் அவைமாறும் பண்புகளும் நிற்கவில்லை
உருவநிலை அவைமாறி உலகியலை உலுக்கவில்லை
உணர்விழந்த மனிதஇனம் உண்மையிதை
நினைக்கவில்லை
கருவினிலே உயிரதனைக் காவுகொள்ளும் கடியமனக்
கயவரைப் போலவர்க்கு இயற்கையினைப்
பிடிக்கவில்லை
திருவினிலே திகழீசன் தீட்டிவைத்த பசுமைகளைச்
சடுதியிலே அழித்தமையால் சாமிமனம்
பொறுக்கவில்லை !


கடலடியில் துளையிட்டுக் கனிவளங்கள் தனையழித்தார்
கானகத்து மரங்களையும் வேரோ டசைத்தெடுத்தார்
திடல்நிலமும் தரையாகத் தோண்டியதைக் குழிசெய்தார்
தொடர்ந்திடப் பூகம்பம் சுனாமிவர வழிசெய்தார்
உடல்நலமும் தேய்ந்திடவே உணவினுக்கும் மருந்திட்டார்
உளநலமும் தினம்வாட உதவாத விருந்திட்டார்
இடர்பல தினம்வாட்டும் இழிபோதைப்
பொருள்கொண்டார்
இதனாலே பருவங்கள் மாறுநிலை தனைக்கண்டார் !

காற்றுங் கடலும் கனிமரங்களும் தருவளங்களும்
கீற்றும் நிலமும் வனங்களும் உயிரினங்களும்
ஆற்று வளமும் அதனண்டை விளைநிலங்களும்
ஔடதம் ஐஸ்வரியமும் இவைபோற் பலவும்
மாற்ற மின்றியே வையகத்தில் நிலைத்திடவும்
மாறாப் பருவநிலை வந்தெய்தப் பணியாற்றவும்
சாற்றுவோம் இதனைத் தாரணி யெங்கணுமே
சாற்றிப் போற்றுவோ மியற்கையை இங்ஙனமே !

**சைவப்புலவர் கல்லோடைக்கரன்**









# தன் நம்பிக்கை வெற்றிதரும்

வயலின் மத்தி மண் தெருவில்
வண்டி ஒன்றில் நெல் மூட்டை
நயமாய் ஏற்றி வேலனென்பான்
நடத்தி மாட்டைச் செலுத்திடவே
வயலின் சேற்று மண்ணிலே
வண்டிச் சில்லும் புதைந்திடவே
அயலிற் சென்று கூவியுமே
ஆரும் அங்கு வந்திலரே.


கொளுத்தும் வெயிலில்
மாடுகளும்
குனிந்து இழுத்தும்
சில்லொன்று
அழுத்த மாகச் சேற்றினிலே
அழுந்தி அசைய மறுத்திடவே
அழுது தலையில் கை வைத்து
ஐயோ சிவனே சில்லினையே
இழுத்து உதவ எவரையுமே
இந்த நேரம் அனுப்பாயோ

என்று இரந்து நிற்கையிலே
எங்கோ இருந்து ஒரொலியும்
நன்றே கேட்க வேலனுமே
நடுங்கி நின்று கேட்டானே
"வேலா உன்தன் தோழைப் பார்
விம்மிப் புடைக்குது பலத்தாலே
நாலா பக்கமும் கூவாமல்
நகர்த்து சில்லைத் தோளாலே".


ஆளில் லாத குரல் தன்னை
ஆண்டவன் குரலென் றவ
னெண்ணி
தோழைக் கொடுத்துச் சில்லுக்கு
துரத்தி மாட்டை ஓட்டிசவே
காளை மாடும் கடிதிழுக்கக்
கதறிக் கொண்டு சில்லுருள
வேளை யோடு தெருவேறி
வீடு சென்று சேர்ந்தானே.

"என்னால் இயன்றது செய்யாமல்
ஏனை யோரைக் கூவிடுதல்
தன்னனில் நம்பிக்கை இல்லாத
தாழ்வைக் காட்டும் இந்நிலையை
முன்னால் அறியா திருந்தேனே
மேலே உள்ள கடவுளின்று
தன்னால் உணரச் செய்தா"
ரென்று
தானே வேலன் மகிழ்ந்தானே.

**Medha Senthil kumar**
**Yr. 6 Gold coast campus**




ஹாடி ரமேஷ்




சிவ்யா உதயணன்

# தன்னம்பிக்கை உந்தன் கை!

மனமே மனமே தளராதே!
எதையும் நினைத்துப் பதறாதே!
வாழ்க்கை என்பது எதிர்நீச்சல்!
உன்னால் முடியும் பெரும் பாய்ச்சல்!

வாழ்க்கை என்பது பெருங்காதை!
அதில் வாழும் நீயே நாயகி!
வரையும் கதையை வரலாறாய்
ஆக்கும் வழியை நீ யோசி!

கனவே ஒருநாள் நனவாக
கண்ணில் ஒளியை நீ ஏற்று!
நினைவே நாளும் வழியாகும்
நித்தம் அதனை மெருகேற்று!

பேசு உன்னுடன் நீ பேசு!
புரியும் வரைக்கும் நீ பேசு!
அவநம்பிக்கையை தரிசாக்கு!
அடையும் இலக்கை பரிசாக்கு!

தேவை உனக்கு நம்பிக்கை!
அதுவே உதவும் தும்பிக்கை!
நம் கையே நமக்கு உதவும் கை!
உறுதி அதனை நெஞ்சில் வை



**ச வேத்தா தர்மசீலன்**

# எனது நாய்க் குட்டி

எனது நாய்க் குட்டியின் பெயர் சிம்பா. அது ஆறு மாதக் குட்டி . சிம்பா என்னைக் கண்டால் வாலை ஆட்டும். தன்னோடு விளையாடச் சொல்லிக் குரைக்கும். பின்பு காலைத் தூக்கி எனக்கு மேல் போடும். அது எல்லாப் பொருட்களையும் நக்கும். அதன் மெத்தையைக் கடித்தே பிய்த்து விட்டது.

அப்பாவும் நானும் சிம்பாவை நடக்கக் கூட்டிச் செல்வோம். மைதானத்திற்குப போய் ஓடி விளையாடுவோம்.

எனக்கு சிம்பா என்றால் சரியான விருப்பம்.




**அரன் கேதரசரமா**

# நான் மிருக வைத்தியர் ஆவது ஏன்?

1. எனக்கு மிருகங்களில் நல்ல விருப்பம்
2. அவை அழகானவை
3. அவற்றோடு விளையாட எனக்கு பிடிக்கும்
4. அவற்றுக்கு உணவு கொடுக்க எனக்கு விருப்பம்
5. மிருகங்களுக்கு நோய் வந்தால் அவை மருந்து குடிக்காது
6. அவற்றை நான் வளர்த்து அவற்றை பராமரிப்பதற்கான படிப்பை படிக்கப்போகிறேன்
7. நான் மிருகவைத்தியாராகி மிருகங்களை அன்பாக பார்ப்பேன

**அபி சங்கவி**

# எனது செல்ல பிராணி



எனது செல்லப்பிராணி மீன். அது மிகவும் அழகானது. என்னிடம் நான்கு மீன்கள் உள்ளன. அவை ஒரு பெரிய மீன் தொட்டியில் இருக்கின்றன. அவை கண்களை திறந்தபடி நித்திரை கொள்ளும். எனது மீனின் நிறம் செம்மஞ்சள். நான் எனது மீன் தொட்டியை வடிவாக அலங்கரித்துள்ளேன். எனது மீன் மிகவும் வேகமாக நீந்தும். நான் நீண்டகாலமாக எனது செல்லப் பிராணியாக மீனை வைத்திருக்கின்றேன்.

**செ. டீபிகா. ஆண்டு - 3**

# Zoo Keeper

எனக்கு மிருகக்காட்சி சாலையின் பாதுகாப்பாளராக வர விருப்பம். எனக்கு மிருகங்களை தொட விருப்பம். மிருகங்களை பாதுகாக்க ஆசை. இயற்கையுடன் சேர்ந்து இருக்க விருப்பம்.

**கிரிஷே சத்தியா (8 வயது)**



# தைப்பொங்கல்

தைப்பொங்கல் தமிழரின் திருநாள். இது தமிழரின் பண்பாட்டு விழா. பொங்கல் என்பதற்கு பொங்கிப் பெருகுவது என்று பொருள். அன்று நாங்கள் சூரியனுக்கும் உழவர்களுக்கும் நன்றி செலுத்துவோம்.


தை முதலாம் திகதி தைப்பொங்கல் கொண்டாடப்படும். கதிரவன் மகர ரேகையிலிருந்து வடக்கு நோக்கி நகரத் தொடங்கும் நாள் தை மாதம் முதலாம் நாள் ஆகும். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது பழமொழி.


தைப்பொங்கல் அன்று நாங்கள் அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்து நீராடி, புதிய ஆடை அணிந்து கடவுளை வணங்குவோம். பின்னர் முற்றத்தில் கோலம் போட்டு, நிறைகுடம் குத்துவிளக்கு, பழங்கள் வைப்போம். அலங்கரித்த புதிய மண்பானையில் பொங்கல் செய்வதற்கு முதலில் பால் விட்டு அடுப்பில் வைப்போம். பால் பொங்கி வரும் பொது ' பொங்கலோ பொங்கல் ' என்று சொல்வோம். பின்பு அரிசி, பயறு, சக்கரை என்பவற்றைக் கொண்டு சுவையான இனிப்பு பொங்கல் செய்வோம். பொங்கல், கரும்பு, தேங்காய் என்பவற்றை சூரியனுக்கு படைத்து நன்றி சொல்வோம்.பின்பு பொங்கலை உறவினர்களுக்கும் பகிர்ந்து சாப்பிடுவோம்.

தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். மாடுகளுக்கு குளிப்பாட்டி, அலங்கரித்து வழிபடுவது மாட்டுப் பொங்கல். நமக்காக உழைக்கும் பசுவிற்கு நன்றி செலுத்துவதற்காக இது கொண்டாடப்படுகிறது .

எங்கள் வாழ்வில் மகிழ்ச்சி உண்டாக, சிறப்பு மிக்க பொங்கலை கொண்டாடுவோம்.

**சாயினா குணாளன்**





# மனிதம் காப்பது அறம்


மனித நேயத்திற்கு எதிரான வன்முறை உணவு விரயம். பசியின் வெப்பம் உணர்ந்தவன் ஒரு நாளும் துணிய மாட்டான் உணவை வீணாக்க. மேற்கத்தைய நாடுகளில் இன்று உணவு விரயம் உத்வேகமாக நடந்து கொண்டிருக்கின்றது. ஆம்! ஒரு ஆங்கில பத்திரிகையின் தலையங்கம் ஒன்று என்னை கவர்ந்தது. அதாவது ஆண்டுக்கு 80 பில்லியன் டொலர்கள் குப்பையில் என்று எழுதப்பட்டிருந்தது. நானும் யார் அப்படி பணத்தை குப்பையில் போடுவது என்று ஆர்வமாக வாசிக்கத்தொடங்கினேன். வாசிக்க வாசிக்க ஓவென்று சத்தமிட்டு அழவேண்டும் போல் தோன்றியது. ஏன் தெரியுமா? அந்த பத்திரிக்கை அறிவித்தது: அவுஸ்திரேலியாவில் ஆண்டுக்கு 80 பில்லியன் டொலர்கள் பெறுமதியான உணவு குப்பைகளில் கொட்டப்படுகின்றது என்று. மானுட சமுதாயத்தின் மீது துளி கூட அக்கறை இல்லாத கல் நெஞ்சம் கொண்ட வீணர்களின் செயல் இது. அதை வாசித்த போது பசியை விட பன் மடங்கு கொழுந்து விட்டு எரிகின்றது என் வயிறு. வேல் கொண்டு பாய்ச்சியது போன்று வலிக்கின்றது என் நெஞ்சு. அன்று பாரதியார் "தனி மனிதனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று பாடினான். ஆனால் இன்று UNICEFவின் (குழந்தைகள் நலனுக்காக செயல் படும் ஒரு நிறுவனம்) கணக்குப்படி ஒரு வருடத்திற்கு அல்ல. நன்றாக நினைவிருக்கட்டும். ஒரு நாளைக்கு ஒன்றல்ல இரண்டல்ல 8,000 சிறுவர்கள் பட்டினியால் இறந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இதை அறிந்தால் பாரதி மீண்டும் மண்ணிலிருந்து கொதித்தெழ மாட்டானா? பிஞ்சு சிறார்களின் பஞ்சம் போக்க சிங்கமென புறப்பட்டு வர மாட்டானா? உலகில் இன்று ஒரு பக்கம் உணவு விரயம். மறுபக்கம் பட்டினிச் சாவு. இயற்கைக்கு மாறான எதிர் மறையான நிகழ்வுகள் இவை. இவ்வுலகில் எம்மோடு பயணித்துக் கொண்டிருக்கும் உயிர்களை காப்பாற்றுவது மனித நேயம் உள்ள மனிதர்களான நம் ஒவ்வொருவரினதும் கடமை என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந் தலை" என்று வள்ளுவன் தாத்தா நமக்கெல்லாம் அறம் சொல்லிக் கொடுத்த தமிழர் நாம். இந்த உலகத்திலேயே முதன்மையான அறம் பகிர்ந்து உண்ணுவதும் பல உயிர்களை காப்பதும் என்று சொல்லிக் கொடுத்தான் வள்ளுவன். வள்ளுவனின் வாக்குப்படி, பட்டினியால் வாடும் மனிதருக்கு பகிர்ந்து கொடுத்து அவர்களை வாழ வைப்பது தானே அறம். அது தானே நியாயமும் கூட. உணவு விரயத்திற்கு தனி நபர் பொறுப்பின்மையும் ஒரு காரணம் என்பது மானுடிராய் நாம் வேதனைப்பட வேண்டிய நிதர்சனமான உண்மை இது. தேவைக்கு அதிகமாகவே உணவுப் பொருட்களை வாங்குகின்றோம். தேவைக்கு அதிகமாகவே உணவுகளை வகை வகையாக சமைக்கின்றோம். மிஞ்சிய உணவுகளை குப்பைத் தொட்டிகளில் மனசாட்சியே இல்லாமல் கொட்டுகின்றோம். நன்றாக நினைவிருக்கட்டும்! நாம் குப்பைகளில் கொட்டுகின்ற ஒவ்வொரு உணவும் நமக்கான உணவில்லை. அது இன்னொருவருடைய உணவு என்பதை மறந்துவிடாதீர்கள்.

இதற்கு தனி மனிதராக நாம் செய்ய வேண்டியது என்ன? "உணவை வீணடிக்கும் வீணர்களை இறைவன் ஒருபோதும் நேசிப்பதில்லை" என்று சொல்கின்றது குர்ஆன். ஆகவே உண்ணுவோம். பருகுவோம். வீண் விரையம் செய்யாதிருப்போம். அறம் போற்றும் மானுடராக விழிப்புணர்வு பெறுவோம். நம் வீட்டிலிருந்து இந்த அறங்களை தொடங்குவோம். ஆம்! தேவையான உணவுப் பொருட்களை மட்டுமே வாங்குவோம். தேவையான உணவுகளை மட்டுமே சமைப்போம்.

இதனால் எமது பணம் காக்கப்படும். நேரம் காக்கப்படும். இயற்கை காக்கப்படும். எல்லாவற்றுக்கும் முதன்மையாக மனிதம் காக்கப்படும். வள்ளுவன் கூறும் அறம் காக்க மனித நேயமுள்ள நாம் உறுதி எடுப்பதோடு அதை நம் அடுத்த சந்ததியினருக்கும் சொல்லிக் கொடுப்போம். உணவாக குப்பைகளில் கொட்டுகின்ற பணத்தை ஏழைகளுக்கு கொடுப்போம். இன்றைய கவிஞன் பாடினான்.
"உதவின்றி தவிப்பவருக்கு உதவிடவே நீ படிப்பாய்.
உணவு இன்றி துடிப்பவருக்கு உணவு தர நீ படிப்பாய்."
நன்றி

**மேகலா மாதவன்**


உங்கள் கண்ணாடியை எடுத்துவிட்டு பாவித்த முகக்கவசங்கள் என்ன விளைவை ஏற்படுத்தி உள்ளன என்பதை கவனியுங்கள்!
Shruti Dinesh (10)



யாதவ் ரமேஷ்

# மனிதனை பதப்படுத்தும் வாசிப்பு

'எண்ணும் எழுத்தும் கண் என தகும்' என்றாள் ஔவை பாட்டி. வாசிப்பு என்பது மனிதவாழ்வில் முக்கியமான ஒன்று. ஒன்றை வாசிக்கும் போது அந்த எழுத்துக்கள் எமக்குள் பல வித பாதிப்பை தர முடியும். அது மட்டும் அல்ல ஒரு மொழி எமக்கு தரக்கூடிய பயன்களில் வாசிப்பும் ஒன்று. எமது மூளையை சுறுசுறுப்பாக்கும் வல்லமையும் வாசிப்புக்கு உண்டு. வாசிப்பு எம்மை பல விதத்திலும் மெருகூட்டும். எழுதும் போதும், கதைக்கும் போதும் அதை உணரலாம். வாசிப்பால் புதிய சொற்கள் ஊடாக சொற்களஞ்சியத்தையே உருவாக்கலாம். அதோடு, அதை எழுதிய புத்தகம் நூலாசிரியரின் மொழியின் வல்லமையை காட்டும். அதன் மூலம் நாங்கள் எமது எழுத்து திறமையை பெருக்கலாம். ஆனால் இன்று நாம் இணைய தள நூல்களை அதிகமாக வாசிக்கிறோம். இவையும் நன்மையை தந்தாலும் அதில் இருந்து வெளிவரும் கதிர்கள் கண்ணுக்கும் மூளைக்கும் பாதிப்பையும் கூடவே தருகிறது. ஆகவே அச்சு புத்தகங்களை வாசிப்போம், பயன் பெறுவோம்.

**அமலினி சந்திரகுமார்**

# சிறுவனின் அன்பு

ஒரு ஆறு வயதான சிறுவன், தனது இரு கைகளிலும் ஒவ்வொரு மாம்பழம் வைத்திருந்தான். அவனது தாத்தா மிகவும் சோர்வாக களைத்துப் போய் அவன் அருகில் வந்தார்.

“எனக்கு ஒரு மாம்பழம் தருகிறாயா?”, எனக் கேட்டார்.

சிறுவன் ஒரு மாம்பழத்தைக் கடித்தான். பின்னர் மற்ற மாம்பழத்தையும் கடித்தான். தாத்தாவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

“தாத்தா! இந்த மாம்பழம் தான் இனிப்பாக உள்ளது. மற்றையது புளிப்பாக உள்ளது. இதைச் சாப்பிட்டுப் பாருங்கள் மிகவும் ருசியாக இருக்கும்,” என்று கூறிக் கொடுத்தான்.

தாத்தாவின் களைப்பும் சோர்வும் ஒரு நொடியில் பறந்து போனது. பேரனக் கட்டி அணைத்து உச்சி மோந்தார்.



**தனுசிகன் சூரியகுமார்**



# நம் முன்னோர்களின் பழக்கம் மூட நம்பிக்கையா?

நம் முன்னோர்கள் கடவுளுக்கு நிகராக மதிக்கப்படுகின்ற போதிலும், அவர்களின் பழக்க வழக்கங்கள் இப்போது மூட நம்பிக்கையாக கருதப்படுவது மறுக்க முடியாத உண்மையாகும். இன்று நாம் இந்த மூட நம்பிக்கைகளில் உள்ள காரண காரியங்களை தெளிவாக விளங்காமல் இருப்பதால், இதை பின்பற்றுவதன் அவசியம் தெரியவில்லை. ஆனால், இப்பொழுது கொரோனா நோய்க் கிருமி உலகம் முழுவதையும் ஆக்கிரமித்த பின், நாம் திரும்பவும் இந்த மறந்த மூட நம்பிக்கைகளை பின்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வீட்டின் முன்னால் நீர் நிறைந்த பாத்திரம் ஒன்று வைப்பது நம் முன்னோரின் வழக்கம். வெளியிலிருந்து வீட்டிற்கு வரும்போது கை கால்களைக் கழுவிக்கொண்டு வீட்டிற்குள் நுழைய வேண்டும் என்பதே இதன் விளக்கம். இதை இளம் சமுதாயம் மூட நம்பிக்கையாக கருதினர். உலகை அச்சுறுத்தும் கொடிய நோயின் தாக்கத்தால், நாம் இப்பொழுது வீட்டிற்கு வந்தவுடன் முதலில் கைகளையும் கால்களையும் கழுவுகின்றோம்.

இதைப்போல், சாவு வீட்டிற்கு சென்றபின் குளிக்க வேண்டும் என்றார்கள். குளிக்காவிடின் ஆவி, பேய் தொற்றிவிடும் என நம்பினார்கள்.இது ஒரு மூட நம்பிக்கையாக கருதப்பட்ட போதிலும், அச்செயலுக்கு விஞ்ஞான ரீதியான விளக்கம் இறந்த உடலில் இருக்கும் நோய்க்கிருமிகள் நம்மை அனுகாமல் இருக்கவேண்டும் என்பது ஆகும்.இப்பொழுது அதிகமானோர் பின்பற்றுவதில்லை. இன்றைய இக்கட்டான கால கட்டத்தில், சுத்தத்தைப் பேணவேண்டிய நிலையில் மக்கள் இதனை பின்பற்ற பெரிதும் விரும்புகின்றார்கள்.

இத்துடன், வேப்பம் இலையையும் மஞ்சளையும் வீட்டிற்கு முன்னால் வைப்பது மற்றும் வாசலில் துளசி மரம் வைப்பது வழக்கம். இதற்குரிய விளக்கம் கெட்ட ஆவிகள் வீட்டிற்குள் வரமாட்டாது என்று கருதினார்கள். இவை இன்று இயற்கை நோய்க் கிருமி நாசினியாக பலர் பின்பற்றத் தெடங்கியுள்ளோம்.

"கடுகு சிறிதானாலும் காரம் பெரிது" என்பதற்கு அமைய சிறிய நோய்க் கிருமியின் பெரிய தாக்கத்தால் நாம் எள்ளி நகையாடிய நம் முன்னோரின் பழக்க வழக்கங்களை நாம் பின்பற்ற தொடங்கியுள்ளோம். நம் முன்னோர் கூறிய மூடப் பழக்கங்கள் இன்று, இன்றியமையாத சுகாதாரப் பழக்க வழக்கங்களாக மாறியுள்ளன. நமது முன்னோர்கள் மூடர்களா? இல்லை, அவர்கள் தத்துவ ஞானிகள் என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**திவியா**

# தாய் மொழி கல்வியை கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம்!

அறிவதற்கும், தெரிவதற்கும், புரிந்து கொள்வதற்கும் காரணமாக அமையும் உயிர் ஊடகமே மொழிதான்.

"மொழியில் சிறந்தது நம் தாய் மொழிதான்."

எவ்வளவு மொழி படித்தாலும் உணர்வுகள் முழுவதையும் தாய் மொழியால் மட்டுமே வெளிப்படுத்த முடியும். தாய் மொழியை அடிப்படையில் இருந்தே கற்கும் குழந்தைகள் பிற மொழிகளிலும் சிறந்த எழுத்தறிவுத் திறனை வளர்த்துக்கொள்கிறார்கள். தன்னம்பிக்கை மற்றும் சிந்திக்கும் திறன் மிக்கவர்களாக உள்ளனர்.

பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவன் கூட தாய் மொழியில் தான் சிந்திக்கின்றான். ஒரு இனத்தின் பன்பாடிற்கு அடிப்படை ஆதாரமே அந்த மக்களின் தாய்மொழிதான். முக்கியமாக நம் தாத்தா, பாட்டி போன்ற பெரியவர்களுடன் பேசுவதற்கு தாய் மொழிதான் துனைபுரிகிறது.

நம் உணர்வுப் பூர்வமான அன்பின் வெளிப்பாட்டிற்கு சிறந்து விளங்குகின்றது. பிப்ரவரி 21ம் தேதி உலக தாய்மொழி தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப் படுகிறது.

"தாய் மொழி கண் போன்றது
பிறமொழி கண்ணாடி போன்றது."

எங்கள் வீட்டில் உள்ள அனைவரும் எம் தாய்மொழியாகிய தமிழில் தான் உரையாடுவோம்.

**சுகிர்தன் சரவண குமார்**

# தெரிந்திராத மொழியை கற்றுக்கொண்ட அனுபவம்

நான் யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்து பழக்கப்பட்டதனால் சிங்கள மொழி தெரியாமல் இருந்தேன். எனது திருமணத்தின் பின் கணவர் புத்தளம் சீமெந்து தொழிற்சாலையில் வேலை செய்த காரணத்தினால் புத்தளத்தில் பாலாவிக்கும் கல்லடிசந்திக்கும் இடையில் சென்று வாழ வேண்டியதாயிற்று . நான் அங்கு தொழிற்சாலை விடுதியில் கணவருடன் தங்கி இருந்தேன்.

அங்கே வாழ்வது எனக்கு ஓர் புது அனுபவமாக இருந்தது. கணவர் காலை ஏழு மணிக்கே வேலைக்குச் சென்று விடுவார். அங்கே வீட்டு வளவை சுற்றி ஆள் உயரத்துக்கு வளர்ந்த (மானா புற்கள்) நிறைந்திருக்கும். அருகே உள்ள காட்டில்இருந்து இடையிடையே சிறிய மிருகங்களின் ஒலி கேட்கும். ஒருவரையும் தெரியாத நிலை. இதனால சிலகாலம் பயத்துடனே காலத்தை கழித்தேன்.

வீட்டில் இருந்தபடியே பழங்கள், தமது தோட்டத்து மரக்கறி, மீன் முதலியவற்றையும் வீட்டிற்க்கு கொண்டு வந்து விற்பவர்களிடம் வாங்கலாம். ஆனால் அதற்கு சிங்கள மொழி தெரிந்திருக்க வேண்டும் மொழி தெரியாத காரணத்ததினாலும், பயத்தினாலும் நான் கதவை திறக்க மாட்டேன்..

ஒரு நாள் ஒரு வயதான சிங்கள இன அப்பு வாசலில் நின்று "நோனா","நோனா" என கூப்பிட்டார் நான் கதவை திறக்கவில்லை . மாலையில் கணவர் வீட்டுக்கு வந்த பின்னர் நடந்தவற்றை கூறினேன் . இங்கே இப்படித்தான் வீடு வீடாக சென்று விற்பனை செய்வார்கள் பயமில்லாமல் வாங்கலாம் என கூறினார்.அடுத்தமுறை இதே போல கதவில் தட்டி "நோனா" "நோனா" எனக் கூப்பிட்டார். நான் சிறிது தயக்கத்துடன் கதவைத் திறந்தேன். அந்த அப்பு தோளில் சுமக்கும் துலாக்காவியில்(ஒரு தட்டையான நீளமுடையது கோலின்,காவுதடி, இரு முனைகளிலும் நீளமான கயிறில் அகலமான பிரம்புக்கூடை தொங்கவிடப்பட்டிருக்கும். காவுதடியை தோளில் தூக்கி வைத்து பாரத்தை சுமக்ககூடியதாக இருக்கும்). உள்ள கூடைகளில் கப்பல் வாழைப்பழங்களும்,பப்பாபழம்,முந்திரிப்பருப்புகளும் இருந்தன.என்னை கண்டவுடன் அவர் துலாக்காவியை கீழே இறக்கி வைத்தார்.

அவர் என்னைப் பார்த்து ஏதோ கேட்டார் வாங்க விருப்பமா எனகேட்கிறார் என ஊகித்து ஓம் என்ற பாவனையில் தலையை அசைத்தேன். அதன் பின் எப்படி விலை பேசுவது என்று யோசித்துப் பார்த்தேன். ஒரு வாழைப்பழத்தை கையில் எடுத்து என்ன விலை என சைகை மூலம் கேட்டேன் அவர் கூறியது எனக்கு விளங்கவில்லை. தரையை காட்டி இதில் எழுதும்படி சைகை மூலம் எழுதிக்காட்டினேன். அவர்எழுதியபடி நான் வாங்கும் பொருட்களுக்கு பணம் கொடுப்பேன். பின் கணவர் தேவையான சில சொற்களை கற்றுத்தந்தார். படிப்படியாக ஒவ்வொரு சொற்களாக கதைத்து வாங்கப்பழகிக்கொண்டேன். சிலகாலத்தின் பின் அந்த அப்புவும் நானும் இரு மொழிகளும் கலந்து கதைப்பதற்கு பழகிக்கொண்டோம்.

இதே போல் வீட்டிற்கு உதவிக்கு வரும் சிங்கள அம்மாவிடமிருந்தும் மரக்கறிகள் சமையலுக்குத் தேவையான பொருட்களின் பெயர்களையும் அறிந்து கொண்டேன். இவர்களுடன் பழகிய இனிமையான காலங்களை இப்பொழுதும் நினைத்து பார்ப்பதுண்டு.

வணக்கம்

**சகுந்தலா விமலராசா**




கெசன்றா சாலினி





நிக்கித்தா சாலினி

# காதலா கற்பனையா?

திரையில் அவள் முகத்தை முதல் முறை பார்த்தேன்
இப்படி ஒரு அழகை பார்த்ததே இல்லை
ஒரு மாலை நேரம்
கடற்கரை ஓரம்
அவள் தொலைவில் நின்றாள்
நான் ஒதுங்கி நின்றேன்
நான் அவளை பார்த்தேன்
அவள் பார்வையில் விழுந்தேன்
இது நிஜமா என என்னை கிள்ளிக் கொண்டேன்
என்னை பார்த்துவிட்டு எங்கேயோ பார்த்தாள்
ம்ம் அவள் நடிப்பை ரசித்தேன்
நடிகை நடிப்பில் ரசிகன் நான் விழுந்தேன்
அவள் என்னை நோக்கி வருவது போல் இருந்தது
ஆனால் அவள் அருகில் இல்லை
அவள் தொலைவை நோக்கி நடந்தாள்
நடந்து கொண்டிருக்கிறாள்
நடந்து போய் விட்டாள்

கடவுளே
இது காதலா கற்பனையா



**அபிதாரணி சந்திரன்**

# மும்மடி ஓவியம் Triptych Canvas


நான் ஒருமுறை எனது நண்பன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவன் தனது வீட்டை விதம் விதமாக அலங்கரிப்பதில் மிகுந்த ஆர்வம் உடையவன். ஒவ்வொரு முறையும் அவனது வீட்டிற்குச் சென்றால் வீட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏதாவது புதிய மாற்றம், புதிய அலங்காரப் பொருள் ஒன்றைக் கண்டிப்பாகக் காணலாம். இம்முறை அவனது வீட்டின் வரவேற்பறையின் சுவரில் புதிதாக ஒரு ஓவியம் மாட்டப்பட்டிருந்தது. இதில் என்ன விஷேசம் என்கின்றீர்களா? ஆம், ஒரு நீண்ட அழகான கன்வஸ் ஓவியத்தை மூன்று துண்டுகளாக வெட்டி சீரான இடைவெளி விட்டு சுவற்றில் மாட்டியிருந்தான். ஏனிப்படி, அழகான ஓவியத்தை சிதைத்துச் சித்திரவதை செய்கின்றாய் எனக் கேட்டதற்கு...சும்மா தன்னிஸ்டத்திற்கு வளரும் பயிரை வரம்பினால் பிரித்து பாத்தி கட்டி அதற்கு வயல் என்று பெயர் வைத்து அதனை அழகென்று எத்தனையோ கவிஞர்கள் புகழ்வதில்லையா? அதுபோல் இதுவும் ஓர் அழகியற் கலை. இதற்குப் பெயர் மும்மடி ஓவியம். ஆங்கிலத்தில் Triptych என்று அழைக்கின்றார்கள். பதினைந்தாம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவில் தேவாலயங்களில் இந்த மரபு உருவானது. காலப்போக்கில் நவீனத்துவ மனை அலங்கரிப்பில் முக்கிய இடம் பிடித்துள்ளது. தற்போது நிழல் படங்களும் இந்த வடிவில் வரத் தொடங்கிவிட்டன. ஒரே படத்தைத் துண்டாடுவதை விட்டு, ஒரே மாதிரியான, அல்லது ஒன்றுக்கொன்று ஏதோ ஒரு விதத்தில் நெருங்கிய தொடர்புள்ள, அல்லது ஒரே கருவைக் கொண்ட மூன்று படங்களை கறுப்புப் பின்னணியில் சம அளவான இடைவெளி விட்டுப் பக்கம் பக்கமாக மாட்டினால், மும்மடி ஓவியம் வந்துவிடும்.

அல்லது வழமைபோல் மூன்று படங்களையும் தனித்தனியாகக் கன்வஸிங் செய்து இடைவெளி விட்டு தொங்கவிடலாம்.

இப்பொழுது சொல்லு, இது சித்திரவதையா? அல்லது அழகியற் கலையா? என்ற கேள்வியுடன் தனது கதாகாலாட்சேபத்தை முடித்துக்கொண்டான் எனது நண்பன்.
எனக்கு விடை தெரியவில்லை. உங்களுக்கு ???

**ஆர்**





# இரட்டையர்

அவர்கள் இரட்டையர் என்பது ஊரறிந்த உண்மை. ஆனால் மூத்தவன் இரண்டு வினாடிகளுக்கு முன்னமே பிறந்திட்டான் என்று சொல்லி தம்பியை தினமும் கேலி செய்வான். "நான்தான் முழு வேலை செய்கிறேன் நீ பகல் முழுதும் தூங்கிறாய். சுத்த சோம்பேறி.".

"அண்ணா, நான் என்ன செய்வேன்? எனக்கு night duty. அதை மாத்தி தாங்கோ என்றால் மாட்டார்கள். ஆகவே நான் பகலில் படுக்கிறேன். அப்பதான் அன்றிரவு எனக்கு வேலைக்குப் போகமுடியும்."
"சும்மா சாக்கு சொல்லாதே. உனக்கு அப்பப்ப லீவு கிடைக்கும். எனக்கு அப்படியல்ல. நான் வியர்வை சிந்தி வேலை செய்து களைத்துப்போயிடுவேன்."

"அண்ணா, தினமும் நீச்சல் குளத்துக்கு செல்கிறாயே. எனக்கு அந்த வசதி இல்லை."
"நான் சந்தோசமாய் நீந்தினால்தான் அடுத்தநாள் வேலைக்கு உசாரா போக முடியும். சோம்பேறி, நீயும் நீந்தலாமே."

ஒரு நாள் ஊர்ப் பெரியவர் அங்கே வந்தார். "பிள்ளைகளே, ஒற்றுமையாய் வாழப் பழகுங்கோ. அவனவனுக்கு கொடுத்த வேலையை திறம்பட செய்யுங்கோ. அல்லது ஊரார் உங்களை மதிக்கமாட்டார்."
ஆனால் இரட்டையர் அவர் புத்திமதியை கேட்டபாடில்லை. "சரி, இருவரும் இடம் மாறி -- அதாவது அண்ணன் இரவிலும் தம்பி பகலிலும்—பணிபுரியுங்கோ."

இப்படி பெரியவர் சொன்னதும், இருவரும் ஒருமித்து கூக்குரல் இட்டனர். "ஐயா மன்னிக்கவும்," என்றான் மூத்தவன். "எங்கள் பிரச்சனைக்கு நாமிருவருமே சேர்ந்து தீர்வு காணுவோம். உங்கள் அறிவுரைக்கு நன்றி."
"அண்ணன் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன்," என்றான் தம்பி.
"அருமையான முடிவு பிள்ளைகளே. உங்கள் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?"

"ஐயா, என் பெயர் தினகரன், தம்பி பெயர் அமுதகிரணன்."
"உங்கள் படம் ஒன்று வேணும் எனக்கு," என்றார் பெரியவர்.

**சகுந்தலா கணநாதன்**

# கறுப்பு முகமூடி

கள்வர்கள் அணியும் கறுப்பு முகமூடி
பிறரை அச்சமூட்ட அணியும் முகமூடி
காவல்துறையினரிடமிருந்து காக்கும்
முகமூடி
முகமூடி கழன்றால் உண்மை தெரியும்

**லோகிதன் கலைச்செல்வன்**

# திருவள்ளுவர்




திருக்குறள் ஒரு சிறந்த தமிழ் மொழி இலக்கியமாகும். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். இக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருக்குறள் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முன்னூற்று முப்பது பாக்களையும் கொண்டது.

திருக்குறளுக்கு முப்பால், தமிழ்மறை, உத்தரவேதம், பொய்யாமொழி, தெய்வநூல், பொதுமறை, ஈரடி நூல், வான்மறை, வாயுறை வாழ்த்து, எனப் பல பெயர்கள் உள்ளன. இந்நூல் அனைவருக்கும் ஏற்ப நல்ல கருத்துக்களை கூறுகின்றது.

**ச. சுகிர்தன்**

# எங்கள் மத்தியில்
# நடமாடும் தெய்வங்கள்



“இப்ப இருக்கிற முடக்க நிலையில், நாங்கள் கிறீஸ்தவ தேவாலயத்துக்கோ கோயிலுக்கோ வாரா வாரம் போகக் கிடைக்கிறதில்லை. ஆனாலும் வீட்டிலே சாமி கும்பிடுகிறோம். எங்கள் மத்தியில் அல்லது எங்கள் வீட்டு அருகாமையில் நடமாடும் கடவுள்களை உங்களிலே யார் யார் கண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார் ஆசிரியர்.



மாணவர்கள் எல்லோரும் திருதிரு வென்று முழித்தார்கள்.
“இங்கிருக்கும் ஒருவருக்கு அந்த உன்னத வாய்ப்பு கிட்டியுள்ளது. அதைப் பற்றி அவரே விளக்குவார். சற்று கேளுங்கள் மாணவர்களே.”
பத்து வயதேயான சிறுமி லதா எழுந்து நின்றாள். “நான் வாய்ப்பு கிடைக்கும் போது எம் மத்தியில் நடமாடும் தெய்வங்களுடன் பேசுவேன், சார்,” என்றாள்.
வகுப்பறையில் எல்லாரும் அவளைத் திரும்பிப் பார்த்து சிரித்தார்கள்.
“பிள்ளைகளே, சிரித்தது போதும். லதா, கொஞ்சம் விளக்கமாகக் கூறு இவர்களுக்கு,” என்றார் ஆசிரியர்.

“எங்கள் தெரு முனையில் வாழும் நடராஜர் அவர்கள் ஒரு மருத்துவர்,” என்றாள் லதா. “அவர் மனைவி ரேவதி ஒரு செவிலியர். அவர்கள் ஒரே மகன் ராமு மருத்துவக் கல்லூரியில் சென்ற வருடம் சேர்ந்தான். தன் தகப்பனைப் போல தானும் மருத்துவப் பணியில் ஈடுபடவேண்டும் என்று சொல்லுவான் எங்கள் அக்கம் பக்கத்தவருக்கு.
“ராமுவின் பெற்றோர் எங்கள் பெரியாஸ்பத்திரியில் பணி புரிகிறார்கள். தாங்கள் எவ்வளவு சோர்வுற்றபோதும், ஒரு மனதுடன் அவர்கள் கொரோனா தொற்று நோயாளிகளுக்கு இரவு பகலாக சிகிச்சை பண்ணுகிறார்கள். லீவு நாட்களில் அவர்கள் உடனே தங்கள் வீட்டுக்குத் திரும்ப முடியாது. தங்களை இரண்டு வாரத்துக்குத் தனிமைப்படுத்திய பின்னரே தம் வீட்டுக்கு அவர்கள் திரும்புவார்கள்.



இவங்களை மாதிரியானவரைத்தான் எங்கள் மத்தியில் நடமாடும் தெய்வங்கள் என்று குறிப்பிடுகிறேன், சார்,” என்றாள் லதா.
“எல்லோரும் லதாவின் உன்னதமான விளக்கத்துக்கு ஒரு பெலத்த கைதட்டல் கொடுங்கோ,” என்றார் ஆசிரியர்.
மாணவர்கள் எழுந்து பெலத்த கரகோஷம் எழுப்பினார்கள்.


“எங்கள் பங்குக்கு நாமும் விழிப்புணர்வோடு, ஆரோக்கியமாக இருந்து, மருத்துவர்கள், மற்றும் அரசு சொல்லும் வழிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடிப்போம்,” என்றார் ஆசிரியர்.

**V.S. கணநாதன்**




சுவேத்தா தர்மசீலன்

அமலன் சந்திரகுமார்



# தேவதையை கண்டேன்

ஒரு அந்திமாலைப் பொழுதினிலே, கையில் ஊன்று கோலுடன் , தள்ளாடிய நடையுடனும் மாலை நேரப் பயிற்சிக்காகச் சென்ற சிவனேசன், கண்ணைக் கவரும் இயற்கைக் காட்சிகளில் வைக்க மனமற்று தனது வீட்டிற்கு திரும்புகிறார். வீட்டினுள் நுழைகையிலேயே தனிமை அவரினைத் தாக்குகிறது. பெருமூச்சுடன் இருக்கையில் அமர்ந்து அவரின் மனதில் அவரது கடந்த கால நினைவுகளின் ஊர்வலம். அதில் எத்தனையோ நிறைவேறாத சின்னச் சின்ன ஆசைகள். கவலை கொண்ட அவர் முன் திடீரென ஒரு தேவதை தோன்றி "உன் ஆசைகளை நிறைவேற்ற இன்றிலிருந்து மூன்று நாட்களுக்கு வரம் தந்தேன்" என்கிறாள்.

"நான் எப்படி உங்களை நம்புவது?" சிவனேசன் தேவதையிடம் கேட்டார்.
அப்பொழுது தேவதை சிறு தூரத்தில் இருக்கும் பூச்சாடி ஒன்றை பார்த்து கைகளை அசைத்தாள்.
சிவனேசனின் கண்களுக்கு முன் பூச்சாடி பல தங்க நாணயங்களாக மாறியது!
"நீங்கள் வேண்டியிருக்கும் அனைத்து செல்வங்களையும் நான் உங்களிடம் கொடுக்க முடியும்," என்று தேவதை கூறினாள்.
"தனிமையின் உணர்வை செல்வங்களால் சரிசெய்ய முடியாது," என்று சிவனேசன் சோகமாக கூறினார்.

இதை கேட்ட தேவதை, சிவனேசனின் கஷ்டங்களுக்காக ஒரு தீர்வை கூறினாள்: "உன் தனிமைக்கு என்னிடம் தீர்வு இல்லை, அதற்கு தீர்வு உன்னிடமே உள்ளது. உங்கள் தீர்வைக் கண்டுபிடிப்பதற்கு என்னைப் பின் தொடருங்கள்."

இதை கேட்டப் பின் சிவனேசன் தேவதையைப் பின்தொடர்ந்தார். சிவனேசன் தேவதையின் வார்த்தைகளை புரிந்து கொள்ளவில்லை, ஆனாலும் தேவதையின் வார்த்தைகள் அவரின் ஆர்வத்தை தூண்டியது. தன்னை சுற்றி இருக்கும் காட்சிகளை ஆய்வு செய்தார். பூக்கள் மலர்ந்து இருப்பதையும், குழந்தைகள் மற்றக் குழந்தைகளுடன் விளையாடுவதையும் சிவனேசன் பார்த்தார்.
தேவதை இறுதியாக ஒரு சிறு கட்டிடத்திற்கு முன் நின்றாள். கட்டிடத்தின் முன் பகுதியில் "அனாதை இல்லம்" என்று எழுதி இருந்தது. குழப்பத்துடன், சிவனேசன் தேவதையை பின்தொடர்ந்தார். சிவனேசன் இல்லத்திற்குள் செல்லும்போது அவர் பார்த்த காட்சி மனதைக் கவரும் காட்சியாக இருந்தது. வெவ்வேறு வண்ண ஆடைகளை அணிந்துள்ள குழந்தைகள் சிரித்து விளையாடினார்கள்.
"தனிமை என்ற சூழ்நிலை இங்கு இருக்கும் அனைத்து குழந்தைகளும் எதிர்கொள்வார்கள். ஆனால் அவர்கள் வருத்தப்படுவதை காண்கிறீர்களா சிவனேசன்?" தேவதை சிவனேசனிடம் கேட்டார்.

"குழந்தைகள் விளையாடுவதை பார்க்கும் போது, உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது அல்லவா?" தமது சூழ்நிலையை ஏற்று வாழ்க்கையின் மகிழ்ச்சியாக இருக்கும் விடயங்களில் தங்களை ஈடு படுத்துகின்றார்கள்.வாழ்க்கையில் கிடைக்கும் சிறப்பான தருணங்களை அனுபவித்து மகிழ்ச்சியாக இருந்தால் தான் தனிமையை தவிர்க்கலாம்.
சிவனேசனும் அதை புரிந்துகொண்டு தேவதையை பார்த்து சிரித்தார், தேவதையும் சிவனேசனின் கவலைகளோடு மறைந்தாள். அப்பொழுதிலிருந்து சிவனேசனும் தன் மகிழ்ச்சியான வாழ்க்கைப் பயணத்தில் தன் ஊன்றுகோலின் உதவியுடன் அடியெடுத்து வைத்தார்.

**சுகன்யா சத்தியானந்தன் & அக்ஷிதா நிர்மலன்**





CASEY FINANCE GROUP

*We value your Dreams*

# When Was Your Last Home Loan Health Check?

Talk to us to see how to save $$$ every month by refinancing your property with the right bank.

**Refinance Rates From 1.79% P.A (Comparison Rate 3.33% P.A) For Owner Occupied Properties**

**Up To $4000.00 Cash Rebate**

**Compare The Right Loan With Multiple Banks**

Contact us on
**(03) 9700 2222**

AUS wide toll free
**1800 400 222**

info@caseyfinance.com.au



# THE MANGO TREE

*Tantalizing your Taste Buds*

## Authentic
## Sri Lankan & Indian Restaurant in Dandenong

## Dine In | Takeaway | Delivery

12 Clow St, Dandenong VIC 3175

9791 1111 | 0403058808

## Opening Soon

# THE MANGO TREE

*Café & Multi Cuisine Restaurant*

SHOP 2, 40-44, Lonsdale Street,
Dandenong, VIC 3175

9791 7779 | 0403058808

# THE MANGO TREE
## CATERING

We cater to all occasions.
We can match any genuine
quotations.

0403058808

ORDER FOOD / CATERING ON www.themangotree.co